**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1378/2023**

**Deposition of LW-2/PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சலேத்து | **Age** | : | 78/2026 |
| **Father Name** | : | ராயப்பன் | **Religion** | : | கிறிஸ்டியன் |
| **Village** | : | சிந்தலைச்சேரி | **Calling** | : | கூலிவேலை |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25/03/2026.**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் சிந்தலைச்சேரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 18/06/2023ம் தேதி இரவு 10.00 மணியளவில் நானும் எனது மனைவியும் இருதய ஆண்டவர் திருவிழாவிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தபோது, எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் இருந்த எங்களது இடத்தில் நாங்கள் போட்டிருந்த வேலியை யாரோ சேதப்படுத்திவிட்டார்கள். அது குறித்து எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர். தற்சமயம் நான் எதிரிகளுடன் சமாதனம் ஆகி கொண்டோம். எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2) கடந்த 18/6/2023 ஆம் தேதி எங்கள் ஊரில் இருதய ஆண்டவர் திருவிழாவிற்கு சென்று விட்டு இரவு 10 மணிக்கு நானும் எனது மனைவியும் வீட்டிற்கு வந்தபோது, எங்களது வீட்டிற்கு பக்கத்தில் இருந்த எங்களுக்கு சொந்தமான இடத்தில் டைமன்ட் வேலி போட்டிருந்தோம் என்றும், அதை பக்கத்தில் குடியிருக்கும் அலெக்ஸாண்டரும் அவரது மனைவியும் சுத்தியலை கொண்டு உடைத்து கொண்டு இருந்தார்கள் என்றும், எனது மனைவி அவர்களிடம் சென்று எதற்காக இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு தகாத வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், அலெக்சாண்டர் கன்னத்தில் அடித்தார் என்றும், எனது மனைவி சத்தம் கேட்டு பக்கத்தில் இருந்த ராணி, மலர்விழி ஆகியோர் வந்து அவர்களை விலக்கிவிட்டார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகக் கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.25 19:11:27 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**